★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ . The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 26உ செவ்வாய் (8—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 27உ புதன் (9—5—56) [இத

புதுவையில் கட்டாய இலவசக் க

முதல் ஏழு வகுப்புகளில் ஆதாரக் கல்விய

புதுச்சேரி, மே

6 வயது முதல் 14 வயதுவரை உள்ள எல்லாக் கு கட்கும், புதுவை மாநிலத்தில் இரண்டாம் திட்டத்தின்கீழ் கட்டாயக் கல்விதர திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

முதல் ஏழு வகுப்புகளில் ஆதாரக் கல்வி முறை பு படும் என்றும் கூறப்படுகிறது.

மொழிவழி மாநிலம் கோரிய 950 பேர் கைது!

75 வயதான முது கிழவர் தலைமையில் ஆர்ப்பாட்டம்

3 மக்கள் சபை உறுப்பினர், 3 சட்டசபை உறுப்பினர் சிறையில்

பீகாரில் உள்ள வங்கப் பிரதேசங்களுக்காக கல்கத்தாவில் பெரும் கிளர்ச்சி

கல்கத்தா, மே 7—

பிகார் மாநிலத்தின் சில எல்லையோரப் பிரதேசங்களை மேற்கு வங்க மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்ற மொழி வழி மாநிலக் கோரிக்கைக்காக, மான்பூம் மாவட்டத்திலிருந்து பல அறப்போர் வீரர்கள் கல்கத்தா நகர்மீது படை எடுத்திருக்கின்றனர்.

175 மைல் தூரத்தில் உள்ள மான்பூம் மாவட்டத்தைச் சேர்ந்தோர் நூற்றுக்கணக்கில் கல்கத்தா வந்து, அந்த மாவட்டம் மேற்கு வங்க மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தி சிறைப்பட்டிருக்கின்றனர்.

'வீடு தூக்குகிறது—சுடுகாடு வரவேற்கிறது' என்ற நிலையிலிருக்கும் 75 வயதான தொண்டு கிழவர் ஒருவர் இந்தப் போராட்டப் படைக்கு, ஆர்ப்பாட்டக் குழுவிற்குத் தலைமை தாங்கி யிருக்கிறார்.

அதுல்கோஷ் என்ற அந்த தாயகப் பற்றுக்கொண்ட முது கிழவரின் துணைவியாரும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு சிறைப் பட்டிருக்கிறார், துணைவருடன்!

இம்மட்டுமோ? மூன்று மக்கள் சபை உறுப்பினர், பிகார் சட்டசபை உறுப்பினர்கள் மூவர் ஆகியோரும், அந்த முதுகிழவரின் தலைமையில் அணிவகுத்து நின்று, ஆர்ப்பாட்டம் நடத்தி சிறைப்பட்டிருக்கின்றனர்.

டல்ஹௌசி சதுக்கத்தில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்திய தொண்டர்களை; போலீசார், தடையுத்தரவை மீறியதாகக் கைது செய்திருக்கின்றனர்.

950 பேர்கள் சிறைப்பட்டிருக்கின்றனர்—ஒரே நாளில், ஒரே நேரத்தில்!

'மொழிவழியாக மாநிலம் அமைய வேண்டும்' என்ற கோரிக்கையின் ஒரு பகுதியாக நடைபெறும். இந்தக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறும் என்று கூறப்படுகிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பீகார்—வங்க இணைப்பு எதிர்ப்புக் குழுவினரும், இந்தக்கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருப்பது, மேற்கு வங்க சர்க்காருக்கு பெரும் நெருக்கடியைத் தருவதாகவும் கூறப்படுகிறது.

✱✱✱✱✱✱✱✱-✱-✱✱✱✱✱✱✱✱✱

மாநில மாநாடு

அழகிரி உணவு விடுதி

மாநில மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மிகவும் வசதியாகவும், நேர்த்தியாகவும் உணவு அளிக்கும் ஏற்பாட்டினை ராபி குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

மாநாட்டுப் பந்தலையடுத்து இந்த உணவு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகைதரும் பொதுமக்கள் அழகிரி உணவு விடுதியில் ருசியான உணவினை மேற்கொள்ளலாம்.

✱✱✱✱✱✱✱✱-✱-✱✱✱✱✱✱✱✱

மாநில மாநாடு:

தலைமை நிலையம்—முகவரி மாற்றம்

மாநில மாநாட்டினையொட்டி தி. மு. கழகத் தலைமை நிலையம் [தற்காலிகமாக] 6—5—56 முதல் 27—5—56 வரை கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

முகவரி:

தி. மு. கழகத் தலைமை நிலையம்
'வள்ளுவர் நகர்',
தி.மு.க. மாநில மாநாடு அஞ்சல்,
திருச்சி

போன் எண்:

மாநாட்டுப் பந்தல்: 666
தலைமை நிலையம்: 676

—தலைமை நிலையம்

இன்னும் பரிசீலனை...!

புதுடில்லி, மே 7—

சம்பளக் குழுவை அமைக்கும் பிரச்சினை இன்னும் பரிசீலனையிலேயே இருப்பதாகத் துணை தொழிலாளா அமைச்சர் அபித அலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'வள்ளுவர் நகரம்' வளர்கிறது!

திருச்சி மாநாட்டு வேலைகள் துரிதமாய் நடைபெறுகின்றன

(தில்லை-வில்லாளன்—நமது விசேட நிருபர்)

விளம்பர வேலைகள்:

திருச்சி, மே 7—

எங்கெங்கும் இன்று மாநில மாநாட்டு பேச்சு; எவர் முகத்திலும் மாநில மாநாடு என்றவுடன் மலர்ச்சி: அதுவும் திருச்சி நகரத்தில் பெரும் பரபரப்பு; எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் மாநாட்டு சுவரொட்டிகள் பார்ப்பவர் கண்களில் பரவசத்தைப் பெய்யும்; கேட்பவர் சிந்தை குளிர பத்துப் பேர் பெரிய தட்டி விளம்பரங்களைப் படித்துக்கொண்டே செல்வர். முக்கிய சுவர் எதிலும் மாநாட்டு விளம்பரம் எழுதப்பட்டிருக்கிறது. சினிமா தியேட்டர்களிலெல்லாம் மாநாட்டு விளம்பர சிலைடுகள் எண்ணற்றோர் இதயத்தில், 'என்று மாநாடு வரும்—என்றுபோய்க்காண்போம்' என்ற எண்ணத்தை ஊட்டுகின்றன. இயக்க ஏடுகளைப் புரட்டுவோர், முதலில் மாநாட்டு விளம்பரத்தைப் படித்துவிட்டுத்தான் மற்றவற்றைப் பார்க்கின்றனர். அவ்வளவு ஆர்வம்—எதிர்பார்ப்பு—திருச்சியில் மாநாட்டு நிர்வாகிகள் விளம்பர வேலைகளை அவ்வளவு வெற்றிகரமாகச் செய்துள்ளனர்.

திருச்சியில் என்ன—திராவிடத்தின் திசைகெட்டிலும் இதே போல்தான் விளம்பரங்கள். ஓடும் பஸ்களில், வண்டிகளில் தட்டி விளம்பரம்—கூடும் மக்கள் கூட்டத்திடையே துண்டு வெளியீட்டு விளம்பரம் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவு மூலம் விளம்பரம் — இப்படி, திராவிடத்தின் கண்களையும், காதுகளையும் திருச்சி பக்கமே திருப்பியிருக்கிறோம்.

★

மாநாட்டு அலுவலகம்:

திருச்சி கிலேதார் தெருவில் அமைந்துள்ள மாநாட்டு அலுவலகத்தில திருச்சி மணியும், லால்குடி பரமசிவமும் அலுவலக வேலைகளை மிகக் கவனமாய் செய்து வருகின்றனர். தினந் தினம் தோழர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான கடிதங்கள் திருச்சி மாநாடு பற்றி விபரம் கேட்டு வருகின்றன. முன்கூட்டியே பணம் அனுப்பி தங்க இடம் கோரிகின்றனர்; இவைகளை யெல்லாம் தோழர் எம். எஸ். மணி கவனித்து வருகிறார்—பணியாற்றுவதில் தோழர் மணி ஒரு கலமணி என்று பாராட்டும் வகையில் பணி நடைபெறுகிறது.

அலுவலகத்தில் ஓவியர்கள் இரவு, பகல் எந்நேரமும் ஓய்வு ஒழிவின்றி விளம்பரத் தட்டிகள், வளைவுகள், மற்றவைகளை எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுத் தேர்தலை ஒத்திவைக்க காங்கிரஸ் மேலிடம் முடிவு?

மக்களின் வெறுப்பு தணிய வேண்டுமாம்!

புதுடில்லி, மே 7—

பொதுத்தேர்தல் பலரும் எதிர்பார்க்கிறபடி வரும் 1957-ம் ஆண்டு துவக்கத்தில் நடைபெறாது போய்விடுமா?

காங்கிரஸ் மேலிடம், தேர்தல்களை ஒத்திவைக்கத் திட்டமிட்டிருக்கிறதா—என்ற சந்தேகத்தோடு கூடிய கேள்விகள் கிளம்பியுள்ளன.

மாநில புதுஅமைப்பை ஒட்டி நாடெங்கும், காங்கிரஸ்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பு, கோபம், சற்று தணிகிறவரையில் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்றும், டில்லியின் மாநில புது அமைப்புத் திட்டத்தில் அநீதிக்கு ஆளாக்கப்பட்ட பகுதி மக்கள், காங்கிரசைப் பாதாளத்தில் தள்ளிவிடுவார்கள் என்று காங்கிரஸ் அஞ்சுகிறது என்றும் தெரியவருகிறது.

மாநில புதுஅமைப்பு மசோதாவைப் பரிசீலிக்கும் மக்கள்சபைப் பொறுக்குக்குழு, பரிசீலனையை ஜூன் திங்களில்தான் முடிக்க இயலுமாம்.

ஜூன் திங்களில் பிரதமர் நேரு நான்குவார காலம் வெளிநாடு சென்றுவிடுகிறாராம் அவர் ஜூலை திங்களில் திரும்புகிறவரை மக்கள் சபை கூடமுடியாது என்றும் எனவே, ஆகஸ்டு திங்களில்தான் மசோதா நிறைவேற இயலும் என்றும், அதன் பிறகு ஏற்கனவே திட்டமிட்டபடி அக்டோபர் திங்களில் புதிய மாநிலங்களை 'அங்குரார்ப்பணம்' செய்துவிட இயலாது—காலம், போதாது என்றும், புதிய மாநிலங்கள் 1957 ஜனவரி 26-ல் குடியரசு நாளன்று, அமுலாவதே சாத்தியமானதாக இருக்க முடியுமென்றும் மேலிடமும், சில மக்கள்சபை காங்கிரசின் உறுப்பினர்களும் கருதுகின்றனராம்.

இதன் விளைவாகவே தேர்தல் சில மாதங்களுக்கேனும் ஒத்திவைக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்றும் கூறப்படுகிறது.

வாரிசு மசோதா வழங்கும் உரிமைகள்

வாரிசு மசோதாவின்கீழ் வழங்கப்பட்ட முக்கிய உரிமைகள் டில்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:—

1. முதல் வாரிசுகள் வரிசைப் பட்டியலில் மகன், மகள், விதவையுடன் அன்னைக்கும் இடம்.
2. தந்தையின் சொத்தில் பெண்களும் சம உரிமை பெறுகிறார்கள்.
3. இந்துப் பெண் வாரிசுரிமையாகப் பெறும் சொத்தில் முழு உரிமை.
4. மனைவி விட்டுச் செல்லும் சொத்தில் கணவர்க்கு உரிமை.

'பிரமச்சரிய ஆசிரமங்கள்'

மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, மே 7—

"குடும்பத் திட்ட மருத்துவ மனைகள் பற்றி எங்களுக்கு எதுமே தெரியாது; எனவே, ஏன் 'பிரம்மச்சரிய ஆசிரமங்களைத் துவக்கக்கூடாது"

என்று சி. டி பாண்டே என்பார், மக்கள் சபையில் கேள்வி ஒன்று எழுப்பினர்.

சுகாதார இலாகா மந்திரியான ராஜகுமாரி அமிர்தகௌர் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையில், 'எவர் வேண்டுமானாலும் அது போன்ற ஆசிரமங்களைத் துவக்கலாம். சுய கட்டுப்பாடும், புலனடக்கமும்தான் சிறந்தவழி என்பதை தான் முழுவதும் ஒப்புக் கொள்கிறேன்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱-✱✱✱✱✱✱✱✱✱✱✱-✱✱✱✱✱✱✱✱✱✱✱-✱✱

பொதுச்செயலாளருக்கு திருச்சி நகரசபை வரவேற்பு

ஒரேமனதாக முடிவு

தி. மு. கழகப் பொதுச்செயலாளரும், இரண்டாவது மாநில மாநாட்டுத் தலைவருமாகிய திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு திருச்சி நகரசபை சார்பில் வரவேற்பு அளிப்பதென்று 7—5—56 மாலை நடைபெற்ற திருச்சி நகரசபைக் கூட்டத்தில் ஒரே மனதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

16—5—56 புதன் கிழமை அன்று வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★-★

நம் நாடு
தமிழக தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—5—'56 செவ்வாய்

அதிகார போதனை!

மொழிவழி மாகாண அமைப்புக் கருத்தில் தனக்குள்ள உடன்பாட்டை, சென்ற பொதுத்தேர்தல் காலத்தில் கூட, தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் வலியுறுத்தி இருந்தது. காங்கிரஸ் வெளியிட்டிருந்தத் தேர்தல் அறிக்கையின் மீதுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் பலனகத்தான், காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு தேர்தலின் போது மக்கள் ஆதரவு காட்டினர்கள் என்பது உண்மையானல், அத்தேர்தல் அறிக்கை மூலம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைத் தயக்கமின்றி நிறைவேற்றி வைக்க வேண்டியதுதான் அரசியல் அறமாகும். அதுதான் உயர்ந்த ஜனநாயகக் கோட்பாடும் ஆகும்.

தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை எப்படியும் நிறைவேற்றி வைக்க வேண்டியதை தனது நீங்காக் கடமையாகக் கொண்டு ஒவ்வொரு அரசியல் கட்சியும்—அது சிறிதாக இருந்தாலும் பெரிதாக இருந்தாலும்—செயல்பட வேண்டும். அப்பொழுதுதான், தேர்தல் கால வாக்குறுதிகள் மீதும், அவைகளை அளித்திடும் அரசியல்கட்சிகள் மீதும், மக்களுக்கு நல்லெண்ணமும், நன்னம்பிக்கையும் ஏற்படுவதற்கு இடமுண்டாகும். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நம்பி, அவைகளைக் கொடுத்தவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, அவ்வாக்குறுதிகளை செயலாற்றத் தவறி விட்டால், அதற்காகத் தங்களுக்குக் காட்டிய ஆதரவை, குறிப்பிட்ட காலவரையறைக்குள் மக்களால் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாதே என்ற இழிநிலைப்பில், ஆதரவு பெறுவதற்கென்றே மக்களை ஏய்க்கத் தேர்தல் வாக்குறுதிகள் செய்வது கூடாது. அத்தகு தவருன நடைமுறையின் விளைவாக, அரசியல் ஒழுக்கம் குன்றிவிடும் என்பதுடன், அரசியல் கட்சிகளுக்கும் மக்களுக்கும் இடையில் இருந்துத் தீர வேண்டிய நல்லுறவும் நசித்துப்போகும். நாள் செல்லச் செல்ல, அரசியல் கட்சிகள் என்றுலேர அலட்சியமும், அவநம்பிக்கையும் மக்களுக்கு ஏற்பட்டுவிடும். அதுவுமன்றி, அரசியல்துறையே 'கயவர்களின் கடைசிப் புகலிடமாகும்' என்ற எண்ணமும் பரவலாக மக்களிடம் ஆழப்பதிந்துவிடும். அத்தகு நம்பிக்கைக்கு மக்கள் பலியாகிவிட்ட பிறகு, அதிலிருந்து மக்களை மீட்சியுறச் செய்வதற்கு எத்தனையோ தலைமுறைகள் தேவைப்படும்.

மக்கள் ஆதரவைக் கோரி தேர்தலில் தந்த வாக்குறுதிகளை, தேர்தலில் வெற்றி பெற்ற பிறகும், வெற்றி பெற்ற கட்சி, அவைகளை நிறைவேற்றி வைக்க முன்வர வேண்டும் என்பது அரசியல் கட்சிகள் அனைத்தும் மேற்கொள்ள வேண்டிய பொதுவிதியாகும். அப்பொது விதியைத் தங்கு தடையின்றி செயலாற்றி, பிறகாலத்தில் பிறகட்சிகளும் பின்பற்றும் வகையில் ஒரு சிறந்த அரசியல் மரபை உருவாக்க வேண்டிய பொறுப்பு, மற்றக் கட்சிகளுக்கு இல்லாத அளவு காங்கிரஸ் கட்சிக்கு இருந்து வருகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ள வரலாற்றுப் பின்னணியே, இவ்வகையில் அதற்குள்ள பொறுப்பையும் மிகுதியாக்குகிறது.

ஆனல் காங்கிரசோ, தேர்தலில் வெற்றிபெற்ற பிறகும் கூட தேர்தல் வாக்குறுதிகளைத் தாங்கி நிற்பது சிறந்த அரசியல் அறமாகாது என்ற போக்கில் நடந்து கொண்டு வருகிறது. தேர்தல் காலத்தில் தரப்படும் எந்த ஒரு வாக்குறுதியும், சாமர்த்தியமாக மக்களை ஏமாற்றி ஆதரவு பெறுவதற்கே அல்லாது, வாய்ப்பு நேருங்காலை அதை நிறைவேற்றுவதற்காக அல்லவே அல்ல எனத் தீர்மானித்துக் கொள்ளும் வகையிலேயே காங்கிரஸ் நடைமுறை இருந்து வருகிறது. மக்களை இலகுவாக ஏமாற்றி அவர்களின் பேராதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அளிக்கப்படும் 'அண்டப் புளுகு ஆகாசப் புளுகு'களே தேர்தல் வாக்குறுதிகளாகும் என்று பொருள் கொள்ளும் வகையிலேயே, காங்கிரஸ் மனப்போக்கு இருந்து வருகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக, மொழிவழி மாகாண அமைப்புத் தேர்தல் வாக்குறுதியில் காங்கிரஸ் நடந்து கொண்டு வரும் நிச்சயமற்ற நடைமுறையைக் குறிப்பிடலாம். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றத் தவறுவதைக்கூட ஒரு பெரும் குற்றமாகக் கொள்ளாது இருக்கலாம். காலதாமதம் செய்யப்படுகிறது என்ற சாதாரண குற்றச்சாட்டுடன் நிறுத்திக்கொள்ளலாம்.

ஆனல் காங்கிரசோ, அத்தகு சிறு குற்றத்தைச் செய்யும் அளவுடன் நின்றுவிடவில்லை. அதற்கு மேலும் சென்று, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை நிர்மூலமாக்கும் தன்மை கொண்ட — நேர்முரணை இருமொழி, பன்மொழி மாகாண அமைப்புக் கருத்தை மக்களிடம் திணிக்கத் துடிதுடிக்கிறது. இதனல்,கொடுத்த வாக்குறுதியை வாய்ப்புக் கிடைத்தும் நிறைவேற்றத் தவறுவது; அதற்கு மாருக கொடுத்த வாக்குறுதிக்கு முற்றும் வேறுபட்ட ஒரு ஏற்பாட்டை மக்கள்மீது பலவந்தமாகத் திணிக்க முயற்சிப்பது; ஆக ஒழித்தல் தொடுத்தல் என்ற இரு பெருந்தவறுகளையும் காங்கிரஸ் மனமொப்பிச் செய்ய முந்துகிறது.

இத்தகைய ஒழித்தல்—தொடுத்தல் முறையால் காங்கிரஸ் கட்சி சீரழிந்து போகிறதே என்பதற்காக நாம் வருந்தவில்லை. ஆனல், ஒரு சிறந்த அரசியல் நடைமுறையை உருவாக்குவதற்குத் தனக்கிருந்த அரிய வாய்ப்பை அக்கட்சி பாழ்படுத்தி வருகிறதே என்பதற்காகவே நாம வருந்தவேண்டியதாகிறது.

வாய்ப்புப் பாழாகிவிடுவதுடன், காங்கிரசின் தவருன செயல் முறையின் விளைவு முடிந்துவிடாது. அது அரசியல் பொதுவாழ்வையே மாசுபடுத்தி, அரசியல் கட்சிகள்மீது மக்களுக்கு ஏற்படவேண்டிய உயர்வான நம்பிக்கையையும் கருக்கொள்ளவிடாது கருவறுத்து விடவும் வழிசெய்கிறதே என்பதை எண்ணும் பொழுது, நமது வேதனை பன்மடங்காகக் கூடிவிடுகிறது. சிறந்த அரசியல் ஒழுக்கத்தை மக்களிடம் நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்திற்குத் தங்களைத் தம்மிச்சையாக ஒப்படைத்துக்கொண்டிருக்கும் நம்போன்றவர் எவருக்கும், காங்கிரஸ் ஒழித்தல்—தொடுத்தல் நடைமுறை பெருந்துயரைக் கொடுத்துத்தான் தீரும்.

வேலை நிறுத்தம், சட்டம் மீறல், அமைதியான நேரடி நடவடிக்கைகள் ஆகிய எதற்கும் இப்பொழுது அவசியமில்லை; ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் தவறு செய்வதாகக் கருதப்பட்டால், அடுத்த பொதுத் தேர்தல் வரை காத்திருந்து, தவறு செய்தவர்களைத் தோற்கடிக்க மக்களைத் தம் கருத்துக்கொப்பப் பயிற்றுவிப்பதுதான் மக்களாட்சி மார்க்கமாகும். இவ்வாறு அடிக்கடி இந்தியப் பிரதமர் நேரு பெருமான், தமது போக்கில் தவறு கண்டு எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் மற்ற அரசியல் கட்சிகளுக்குப் போதனை புரிந்துவருகிருர். ஆனல், அவரோ, தாம் அளிக்கும் போதனையின் செயல்கருவியாகத் தாமே நடந்துகாட்டி, போதனையின் சிறப்பை மெய்ப்பித்துக்காட்டத் தவறிவிடுகிருர்.

அதாவது, தேர்தல் காலத்தில் மக்களுக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியதுதான், மக்கள் ஆதரவு பெற்று ஆட்சிபீடத்தில் ஏறி இருப்பவர்களின் அரசியல் அறநெறியாகும். அச்செயல் முறைதான் மக்கள் ஆட்சி முறைக்கு ஆணிவேர்—உயிர்நாடி. ஆனல் இந்தியப் பிரதமர் நேரு பெருமானே, மொழிவழிமாகாணங்களைச் சீர்திருத்தி அமைப்போம் எனத் தேர்தல் நேரத்தில் வாக்களித்துவிட்டு, மக்கள் ஆதரவு பெற்று அரசபதவி பெற்றப் பிறகு, அதை நிறைவேற்றுவதைக் கைவிட்டுவிட்டு, வேறு ஒரு புதுக் கருத்தை—அதுவும் அக்கருத்தை குழிதோண்டி புதைக்கும ஒரு முரண்பட்ட ஏற்பாட்டை மக்கள் மீது சுமத்த முற்படுகிருர். இங்கு, தமது போதனைப்படி தாம் நடந்துகாட்ட அவர் முன்வரவில்லை. இவ்வகையில், மக்களாட்சி முறையைவிட்டு விலகிச் செல்ல அவர் முன்வருகிருர்.

மக்களின் ஒப்புதல் பெருமலேயே எதையும் ஆட்சியில் இருப்பவர்கள் செய்யலாம என்ற நினைப்பில் அவர் நடந்துகொள்ள முயலுகிருர். அடுத்தப் பொதுத் தேர்தல்வரையில் காத்திருந்து, மக்களின் ஒப்புதலைப் பெற்று பன்மொழி மாகாணங்களை அமைக்க முற்படுவதுதான், தமது போதனைப்படி மக்களாட்சி முறையாகும என்பதை நேரு பெருமான் ஒப்பி நடக்க மறுக்கிருர்-ஏற்றுச்செயலாற்றத் தயங்குகிருர்!

மக்களாட்சி முறையின் விதிகள், அரசியல் கட்சிகள் அனைத்தும் மேற்கொள்ளவேண்டிய பொது விதிகளாகும். அதன் விதிகளுக்கு ஆளும கட்சியும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அதைவிடுத்து, மற்றக் கட்சிகள்தான் அவைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்; மற்றக் கட்சிகளுக்கு அவைகளை வலியுறுத்திக் கூறும் பொறுப்பு மட்டும்தான் ஆளும் கட்சிக்கு உண்டு என்றப போக்கையே நேரு பின்பற்றி வருகிருர்.

அவருடைய சொல்லும்-செயலும் ஜனநாயகத்தை வளர்ப்பதாக இல்லை. அவர் சொல் ஜனநாயகத்தைக் காப்பதாகவும, செயல், அதைக் கொலை செய்வதாகவும் அமைந்திருக்கிறது. எனவே, ஜனநாயகத்தை செயலளவில் மீறிக கொண்டிருப்பவர்களுக்கு, ஜனநாயகரீதியில் கூறப்படும பதிலை புரிந்துகொள்ள முடியாது. எனவே, அமைதியான நேரடி நடவடிக்கைகள் மூலம் பதில் தரவேண்டியது மற்றக் கட்சிகளின் கட்டாயமாகிவிட்டது.

நேருவின் போதனை, ஜனநாயக வளர்ச்சியைக் கருதிச் செய்யப்படுவதன்று. தனது பதவியையும், புகழையும் கட்டிக் காத்துக்கொள்ளவே தரப்படும் அதிகார போதனையாகும். அதிகாரப் போதனையை மாற்ற அரசியல் கட்சியினர் ஏற்கவேண்டும் என எதிர்பார்ப்பது, எளனத்திற்குரியது—ஏமாற்றமளிக்கக் கூடியது!

ஆங்கிலத்தின் மீது ஏன் இந்த மோகம்?

வர்த்தகர் மீது லால்பகதூர் சாஸ்திரி பாய்ச்சல்

சூரத், மே 6—

"இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டிய நீங்கள் ஏன் ஆங்கிலத்தை உபயோகிக்கிறீர்கள்? ஆங்கிலத்தின்மீது உங்களுக்கு ஏன் அவ்வளவு மோகம்?"

என்று கேட்டாராம், சூரத் நகர வர்த்தகர்களைப் பார்த்து, இந்திய இரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரி.

சூரத் நகர வர்த்தக கழகத்தவர் இந்த மந்திரிக்கு மனு ஒன்றை ஆங்கிலத்தில் தந்தனராம். அப்போது இந்த மந்திரி கோபமடைந்தவராய் கூறியதாவது:—

"என்தான் இந்த வியாபாரிகள் ஆங்கிலத்தின்மீது இத்தனை மோகம் கொண்டிருக்கிருர்களோ?

"தமிழ் நாட்டிலோ அல்லது இதர தென்னுட்டு மாநிலங்களிலோ ஆங்கிலம் உபயோகப்படுத்தப் பட்டால், அதில் நியாயம் இருக்கலாம்; அங்கெல்லாம்கூட இந்தியை சிறிது சிறிதாக உபயோகித்து வருகின்றனர்.

"நான் நாட்டின் சகலதுறைகளிலும், இந்தியைப் புகுத்த வேண்டும் என்று கூறுவதாகக் கொள்ள வேண்டாம். அல்லது, நான் ஆங்கிலத்தை எதிர்ப்பதாகக் கொள்ளவும் வேண்டாம்.

"ஆனல் இங்கு, இந்தி வழங்கும் பகுதிகளுக்கருகில் உள்ள குஜராத்தில் இருப்போர், இந்தியில் இல்லாவிடினும் இந்த மனுவை, குஜராத்தியில் தந்திருக்கலாம். நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியைக் கடைப்பிடிக்கவேண்டும்."

கொய்யப்பட்ட நாகர் தலைகள் எவ்வளவு?

பண்டித நேரு புள்ளிவிபரம் தருகிருர்

புதுடில்லி, மே 7—

தனது இராணுவம், நாகர்களில் எத்தனைபேர்களைப் படுகொலை புரிந்தது என்ற புள்ளி விபரங்களை மக்கள் சபையில் பிரதமர் நேரு தந்திருக்கிருர்.

இதுவரை 100-க்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாயும், இது சரியான கணக்கு அல்லவென்றும், கொல்லப்படுவோரை, நாகர்கள் சீக்கிரத்தில் அப்புறப்படுத்திவிடுவதாகவும் நேரு கூறியிருக்கிருர்.

சர்க்கார் தரப்பில் 17 பேர் கொல்லப்பட்டனர்; 39 பேர் படுகாய முற்றனர்: 5 பேர் காணப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிருர்.

பேச்சுவார்த்தைகளில் தடை ஏற்பட்டுள்ளதாம்!

புதுடில்லி, மே 4—

அசாமில் மற்ருெரு 500 சதுர மைல் பரப்பில் எண்ணெய் தோண்டுவது பற்றி அசாம் எண்ணெய் கம்பெனியாருக்கும்—இந்திய சர்க்காருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் முட்டுக்கட்டைகள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

துர்காபூரில் அமையும் உருக்குத் தொழிற்சாலை

தேவையான ஊழியர்களுக்குப் பிரிட்டனில் பயிற்சி

துர்க்காபூரில் அமைக்கப்படும் இரும்பு-உருக்குத் தொழிற்சாலைக்குத் தேவையான ஊழியர்களுக்கு, பிரிட்டனில் பயிற்சியளிக்க, பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இட அமைப்பு வேலை, ஜுலை மாதத்தில் தொடங்கப்படும், ரோடு-இரயில் வசதிகளைச் செய்யவும் நீர், வாயு, நீராவி முதலிய வசதிகளைச் செய்யவும் ஒரு நிறுவனமும், மின்சார அமைப்பு ஆலோசனை கூற மற்ருெரு நிறுவனமும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன.

'மீண்டும் ஆலோசிக்க வேண்டியதில்லை'

சென்னை, மே 4—

1956—57 கல்வி ஆண்டு முதற்கொண்டே அடிப்படை பல்கலைக் கழகம் படிப்பைத் துவக்குவதென சென்னை பல்கலைக் கழக 'சிண்டிகேட்' தீர்மானித்திருக்கிறது. இம்முடிவை மீண்டும் ஆலோசிக்க வேண்டியதில்லை என்றும் கருத்தறிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

துறைமுகதொழிலாளருக்கு சிகிச்சை வசதி

மருத்துவமனை—விடுதி கட்ட ரூ. 6,25,000 அனுமதி

புதுடில்லி, மே 4—

சென்னை துறைமுக 'டிரஸ்டு'க்கு ஒரு புதிய மருத்துவமனையையும், சிறிய மருத்துவ விடுதியையும் நிறுவுவதற்கு மத்திய போக்குவரத்து இலாகா ரூ. 6,25,000 அனுமதித்திருக்கிறதாம்; சுமார் 5,000 துறைமுக 'டிரஸ்டு' தொழிலாளர்களுக்கு இப்புதிய மருத்துவமனையில் சிகிச்சை வசதி அளிக்கப்படும்.

அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டதாம்!

புதுடில்லி, மே 3—

"இந்தியாவில் 15 மாநிலங்களில் 'பிளேக்' அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது. சென்னை, பம்பாய் மாநிலங்களில் இந்நோய் ஏறக்குறைய ஒழிந்துவிட்டது; மைசூர், ஆந்திரா மாநிலங்களில் ஒழிந்துக் கொண்டு வருகிறது. சென்னை மாநிலத்தில் 'பிளேக்'கினல் இறந்தவர்களின் எண்ணிக்கை 1951 ல் 51 பேர்; ஆனல், 1955-ல் ஒருவர் கூட இந்நோய்க்கு இரையாகவில்லை" என்று இந்திய சர்க்கார் துணை சுகாதார அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகரன் மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநில மாநாடு

திருச்சிராப்பள்ளி

★

திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள

'வள்ளுவர் நகரில்'

1956 மே 17, 18, 19, 20-ம் நாட்களில்

நடைபெறும்

தலைவர் : **இரா. நெடுஞ்செழியன்**

துவக்குபவர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

கண்காட்சித் திறப்பாளர் : **என். வி. நடராசன்**

கருத்துரை வழங்குதல்: **தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள்**

நாதசுர இசை : திருவாவடுதுறை **இராசரத்தினம்**

வில்லுப்பாட்டு : **என். எஸ். கிருஷ்ணன்**

இன்னிசை : **கே. ஆர். இராமசாமி, அனீபா, கஸ்தூரி, செல்வா**

நாடகங்கள் : **எம். ஜி. ஆர். குழுவினர்**, **எஸ். எஸ். ஆர். குழுவினர்**

தி. மு. க. விருது பெறுபவர் : மூவலூர் **இராமாமிர்தத்தம்மையார்**

நிகழ்ச்சி நிரல்:

17—5—56 வியாழன் :

காலை 9-00—ஊர்வலம் துவக்கம் [திருச்சி சிந்தாமணியிலிருந்து 'வள்ளுவர் நகரு'க்கு]

பகல் 1-00 — கொடியேற்று விழா : மாநாட்டுத் தலைவர்.

" 1-30 } மாலை 4-00 } — இடைவேளை

" 4-00—'புத்தர் வரலாறு' —வில்லுப் பாட்டு : கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

" 5-00 — கண்காட்சித் திறப்பு விழா : துணைப் பொதுச் செயலாளர் தோழர் என்.வி. நடராசன்

" 5-30 — இன்னிசை அரங்கு : நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

" 6-30 — நாதசுர இசை அரங்கு : இசைப் பெரும் புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம்.

இரவு 8-00—விருது வழங்குதல் : மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு; அறிஞர் அண்ணு பாராட்டுரை.

" 8-30 } 10-00 } —இடைவேளை

" 10-00—'புது வெள்ளம்' நாடகம் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

18—5—56 வெள்ளி :

காலை 7-30 } " 8-30 } — பிரதிநிதிகள் கூட்டம்

" 9-00—இன்னிசைஅரங்கு இசைமுரசு அனீபா.

" 10-00— " இசைச்செல்வி ஜி.கஸ்தூரி

" 11-00 — துவக்கவுரை : தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.

" 12-00 — வரவேற்புரை : தோழர் அ. பெ. தருமலிங்கம்.

பகல் 1-00 } மாலை 3-30 } — இடைவேளை

" 3-30— இன்னிசை அரங்கு : இசைக் குயில் பி. எஸ் செல்வா.

" 4-30—தலைவரை முன்மொழிதல்.

" 4-45— " வழிமொழிதல்

" 6-00 — தலைவர் முன்னுரை : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

இரவு 8-00 } " 10-00 } - இடைவேளை

" 10-00—'மணி மகுடம்' நாடகம் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

19—5—56 சனி—காலை 9 மணி :

சிறப்புச் சொற்பொழிவுகள் :

1. 'விடுதலைக் கிளர்ச்சிகள்' —கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. 'தொழிலியல் புரட்சி' —காஞ்சி-கல்யாணசுந்தரம்
3. 'உரிமைக் கிளர்ச்சிகள்' —அருண்மொழி பி. ஓ. எல்.
4. 'ஜனநாயகம்' —கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்)
5. 'கல்வித் திட்டம்' —வி. ஜி. இராசையா பி. ஏ. எல். டி.
6. 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு' —தில்லை-வில்லாளன்
7. 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்' —க. அன்பழகன்
8. 'தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்' —என். எஸ். இளங்கோ
9. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' —மு. கருணாநிதி

நண்பகல் 1-30—மாலை 3-30 இடைவேளை

10. 'தாய்க்குல வரலாறு'—சத்தியவாணிமுத்து
11. 'மொழிப் பிரச்சினைகள்' — கண்ணதாசன்
12. 'கலையில் கருத்துப் புரட்சி'—சி. பி. சிற்றரசு
13. 'தத்துவ வரலாறு' — டி. கே. சீனிவாசன்
14. 'புத்தர் நெறி' — ஏ. வி. பி. ஆசைத்தம்பி
15. 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' —அரங்கண்ணல்
16. 'உலக அமைதி' — ப. உ. சண்முகம்
17. 'மறைந்த இயக்க மாவீரர்கள்' —என். வி. நடராசன்
18. 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' —ஈ. வெ. கி. சம்பத்

இரவு 8-30—10-00 இடைவேளை

" 10-00 'அட்வகேட் அமரன்' நாடகம் —எம்.ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

20—5—56 ஞாயிறு :

காலை 7-30 } " 8-30 } —பிரதிநிதிகள் கூட்டம்

" 9-00—தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 | மாலை 3-30 | - இடைவேளை

" 3-30—தீர்மானங்கள் நிறைவேற்றல்

" 6-00—அறிஞர் அண்ணு சிறப்புரை

இரவு 7-30 -தலைவர் முடிவுரை

" 8-00—நன்றியுரை

" 8-30 | " 10-00 | - இடைவேளை

" 10-00— 'சுமை தாங்கி' நாடகம் : புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

★

நுழைவுக் கட்டணங்களின் விபரம்

நான்கு நாட்களுக்கும் சேர்த்து :

	ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ. 10—0—0	10—0—0
2-ம் பிரிவு	" 5—0—0	2—8—0
3-ம் பிரிவு	" 3—0—0	1—8—0

தனித்தனி ஒவ்வொரு நாளும் :

	ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ. 3—0—0	3—0—0
2-ம் பிரிவு	" 1—8—0	0-12—0
3-ம் பிரிவு	" 1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக் கட்டணம் (நுழைவு உட்பட) : ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாத பிற வரவேற்புக்குழு உறுப்பினர்கட்டணம்: " 25—0—0

5 வயதுக்கு மேற்பட்டோர் நுழைவுச் சீட்டு பெறவேண்டும்

குறிப்பு: பொதுத்தேர்தல் குறித்துத் தி. மு. கழகத்தின் முடிவு எதுவாக இருக்க வேண்டும் என்பதுபற்றி, மாநாட்டிற்கு வருகைதருவோரின் கருத்து,வாக்குரிமைச் சீட்டுமூலம் 19—5—56 காலை 6-மணியிலிருந்து மாலை 6-மணிக்குள் அறியப்படும்.

எம். எஸ். மணி, எஸ். முத்து—செயலாளர்கள்

அ. பெ. தருமலிங்கம்—வரவேற்புக்குழுத் தலைவர்

... விழாப் ... துக் கூட்டம்

★

திருச்செங்கோடு:

10 கால் மண்டபம் முன்

10—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
எஸ். பி. சின்னையன்

பேசுபவர்:
மு. கருணாநிதி

திருநாகேச்சுரம் திருவள்ளுவர் கழக ஆண்டு விழா

10—5—56 மாலை 6 மணிக்கு திருநாகேச்சுரம் தேரடியில் மேற்படி கழக முதலாவது ஆண்டு விழா திரு. அன்பு கணபதி தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் க. வெள்ளைவாரணனார், க. அன்பழகன், சி. சம்புலிங்கம், அறிவுடைநம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தொழிலாளரும் முதலாளிகளும்

மந்திரி ஜெகஜீவன்ராம் கருத்து

திருச்சூர், மே 7—

'மூலதனமும் தொழிலாளரும் பிரித்துப்பார்க்க முடியாத பங்காளிகள் என்று எண்ணுவது—தவறு'

என, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் இங்கு தொழிலாளரிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தொழிலாளருக்கு மூலதனம் இன்றியமையாத தல்ல; ஆனால் மூலதனமுடையோருக்கு தொழிலாளர்கள் இன்றியமையாதவர்களாவர். ஏனெனில், தொழிலாளர்கள் மூலதனமின்றியே ஏதேனும் உற்பத்தி செய்ய முடியும்; ஆனால், தொழிலாளர்களின்றி மூலதனத்தை மட்டும் கொண்டு எதும் உற்பத்தி செய்யமுடியாது.

"எனவே, தொழிலாளரும்—முதலாளிகளும் ஒன்றாக இணைந்து வேலை செய்ய வேண்டுமானால், தொழிலாளர்கள் மூத்த பங்காளிகளாகக் கருதப்பட வேண்டும். மேலும், தொழிலாளருக்கு அவர்களின் உழைப்பிற்காக நியாயமான ஊதியம் தரப்படவேண்டும் என்பதுடன், இலாபத்திலும் நியாயமான பங்கு தரப்படவேண்டும்" என்றும் அந்த மந்திரி அறிவுரை பகன்றாராம்.

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளுக்குப் பால்

இலங்கை சர்க்கார் இலவசமாக வழங்கும்

கொழும்பு, மே 7—

இலங்கையில் பள்ளி செல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும், தினம்தோறும் ஒரு குவளை பால் இலவசமாகத் தரப்படும்; இது வரும் செப்டம்பர் முதல் கிடைக்கும் என்று தெரியவருகிறது.

தேர்தலில் வாக்களித்தபடி, இப்போதுள்ள சர்க்கார்; குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யும் என்றும் தெரியவருகிறது.

இது, அமெரிக்கா வழங்கியுள்ள 15 கோடி பவுண்டு பால் மாவிலிருந்து தரப்படுமாம்.

'வள்ளுவர் நகரம்' வளர்கிறது!

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

அலுவலக போன் 542-க்கு ஓய்வில்லை. மாநாடு பற்றி விபரம் கேட்டபடி யுள்ளனர்.

★

வரவேற்புக் குழுவினர்:

அன்பில்-தர்மலிங்கம், பராங்குசம் ஆகியவர்கள் மாநாட்டு வேலைகளைக் காற்று போல் திரிந்து, முடித்துத் தருகின்றனர். வருவோருக்கு அதிக வசதிகள் செய்து தரவேண்டும் என்று அன்பில் மிக அக்கறையுடன் வேலை செய்கிறார். அன்பெனும் இல்லம் ஆயிற்றே, அவர் வாழும் இடம்; அதனாலேயே, வருவோரிடம் அவ்வளவு அன்பு கொண்டு வீடுகளைத் தேடுகிறார்; சத்திரங்களை நாடுகிறார், தங்க வசதி தர—தண்ணீர் வசதி, சாப்பாட்டு விடுதி வசதி—என்று அலைகிறார்.

பராங்குசமோ, கொடி தைக்கவா, கோட்டை கட்டவா—என்று பறக்கிறார்.

மாநாட்டு கார், திருச்சியில் ஒரு நிமிடம்கூட ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கிறது.

★

பந்தல் வேலை:

பந்தல் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மாவட்டங்களின் விடுதிகள், கடைவீதிகள் முதலியவைகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் நான்கைந்து தினங்களில் பந்தல் வேலைகள் முடிந்துவிடும்.

பந்தல் வேலைகளை முன்னின்று நடத்துபவர் சாம்பு அல்லவா? சோம்பல், சாம்புவுக்கு வேம்பு ஆயிற்றே! பின், அதில் சந்தேகம் ஏன்? சாம்பு, எடுத்ததை சிக்கனத்தோடு முடிப்பதில் பேர் பெற்றவராயிற்றே!

தோழர்கள் அழகமுத்து, வானமாமலை, தமிழரசு ஆகியோர் உடனிருந்து உறுதுணைபுரிந்து வருகின்றனர்.

★

மின்சார வேலைகள்:

தோழர் ராபி குழுவினர், தங்கள் வேலைகளைத் தொடங்கிவிட்டனர். மாநாட்டு உள்பந்தலில் 'ஒயரிங்' வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சொல்லாமலே செய்து திகைக்க வைக்கும் தோழர்களில் ஒருவர் ராபி! மாநாட்டுக்கு வருவோரை ஒளி வெள்ளத்தில் மூழ்கடித்துக் காட்ட வேண்டும் என்பதற்காக இன்றிலிருந்தே திட்டம் போட்டு வேலை செய்கிறார்.

★

டெலிபோன், தந்தி தபால் நிலையம்

மாநாட்டுப் பந்தலில் டெலிபோன் வைக்கப்பட்டுள்ளது. தந்தி, தபால் நிலையம் வைக்கவும் கொட்டகை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

★

தலைமை நிலையம்:

தற்காலிகமாக இம்மாதம் 6-ம் நாளிலிருந்து தி. மு. க. தலைமை நிலையம் திருச்சிக்கு மாற்றப்பட்டு பணியாற்றுகிறது. தலைமை நிலைய அலுவலகம், 'ரேஸ்கோர்ஸ்' மைதானத்தை அடுத்த செம்பட்டில், கலிபுல்லா பங்களாவில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஆகியோர் இங்கிருந்து மாநாட்டு அலுவல்களைக் கவனித்து வருகின்றனர். தோழர் மதியழகன் அவர்களும், நானும் இங்கிருந்து தலைமை நிலைப்பொறுப்புகளைப் பார்த்து வருகின்றோம். தலைமை நிலைய வேலைகளைத் தோழர் பொன்னூர்—சுப்பிரமணியம் ஏற்று பணியாற்றுகிறார்.

ஓவியக் கண்காட்சிக்கான ஓவிய வேலைகள் துரிதமாய் நடைபெற்று வருகின்றன. ஓவியர் பழனி தலைமையில், எட்டு ஓவியர்கள் வேலை செய்து வருகின்றனர். தோழர் பன்னீர் செல்வம் பொதுச்செயலாளருடனிருந்து கடிதப் போக்குவரத்துகளைக் கவனித்து வருகின்றார். அழைப்புகளும், நிகழ்ச்சி விபரங்களும் அச்சாகிக் கொண்டிருக்கின்றன. பொதுக் குழு உறுப்பினர்கள் பலர் வந்து மாநாட்டு அலுவல்களை, எப்படி நடைபெறுகின்றன என்று கண்டு திரும்புகின்றனர்.

★

முகப்பு:

மாநாட்டு முகப்பு வேலைகள் சென்னையிலேயே செய்யப்பட்டு, தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களால் திருச்சிக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ஓவிய நிபுணர் செல்லையா மேற்கொண்டு ஆவன செய்து வருகிறார்.

முகப்பு வேலைகள் இன்று ஆரம்பமாகிவிட்டது. திருச்சியிலேயே செய்யப்படும் அலங்கார முகப்பு வேலைகளை மாயவரம் தோழர்கள் நேற்றிலிருந்து செய்து வருகின்றனர்.

★

தண்ணீர் வசதி:

தண்ணீர் வசதிக்காக, பல கிணறுகளிலிருந்து மோட்டார் மூலம் நீர் இறைத்து, குழாய்கள் மூலம் மாநாட்டுப் பந்தலுக்குக் கொண்டுவரும் வேலை நேற்று துவங்கிவிட்டது. தண்ணீர் தட்டுப்பாடின்றி எல்லா மக்களுக்கும் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★

தொண்டர் படை:

தொண்டர் படையில் ஏறத்தாழ மூன்றூறு பேர்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளனர். இம்மாதம் 12-ந் தேதியிலிருந்து தொண்டர்படை முகாம் வேலை செய்யும். தொண்டர் படைத் தலைவர் ஷெரீப் இச்காரியத்தை மேற்கொண்டுள்ளார். தொண்டர் படையினர் தொண்டு எப்படி சிறந்த முறையில் இருக்க வேண்டும் என்று அனுபவ அறிவு கொண்டவர் ஷெரீப்; ஆகவே, தொண்டர் படைத் தொண்டு பற்றி நாம் அதிகம் எதிர்பார்க்கலாம். தோழர்கள் குத்தூஸ், கைலாசம் தொண்டர் படைத் துணைத் தலைவர்களாக இருந்து பணியாற்றுவர்.

★

பத்திரிகை நிருபர்கள்:

இத்திங்கள் 10-ம் நாள் நிருபர்களுக்கு, மாநாட்டு அலுவலகத்தாரால் தேநீர் விருந்தளிக்கப் படவிருக்கிறது. மாநாட்டை ஒட்டி, ஒரு நிருபர் மாநாடு நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★

அழைப்பு:

ஆகவே, திராவிடத்தீரே! திராவிடத்தின வரலாற்றிலே ஒரு திருப்புமுனை, திருச்சி மாநாடு! திரள்திரளாய் வந்து, திராவிடத்தின் எதிர்காலத்தை நிர்ணயித்திட வாரீர்—வாரீர் என்று வரவேற்புக் குழுவினர் அழைக்கிறார்கள்.

★

சட்ட திட்டம்:

சிதம்பரம் பொதுக் குழுவில் முடிவு செய்யப்பட்டதற்கேற்ப சட்ட திட்ட திருத்தக் குழுவினரான பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும், நானும் சட்ட திட்ட திருத்த வேலைகளைச் செய்துவருகிறோம். திருத்த நகல், பொதுக் குழு உறுப்பினர்களுக்கு 10-ந் தேதிவாக்கில் அனுப்பிவைக்கப்படலாம். 16-ம் நாள் நடைபெறும் பொதுக்குழுவின் முடிவுக்கு வைக்கப்படும்.'

கழகக் கூட்டம்

★

திருச்சி:

உறையூர் கடைவீதி

10—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
அன்பில்-தர்மலிங்கம்

பேசுவோர்:
கண்ணதாசன்
எம். எஸ். மணி

சென்னை 9-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம்

9—5—56 இரவு 9 மணிக்கு சென்னை—எழும்பூர், எண் 4, பரமானந்த முதலி தெரு, கழகப் பணிமனையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அது போது, மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதி தேர்ந்தெடுத்தல், கழக எதிர்கால நிலை ஆகியவைகளைக் குறித்து முடிவு செய்யப்படும்.

சேலம் நகர தோழர்களுக்கு:

"திருச்சி மாநில மாநாட்டிற்கு சைக்கிள் மூலம் செல்ல விரும்புவோர், கே. இராமையா அவர்களிடம் (தேனீர்கடை, அம்மாப்பேட்டை மெயின் ரோடு) தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளவும்" என்று, செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

எவ்வளவு தெரியுமா?

கைத்தறி துணி விற்பனைமீது. 1955 நவம்பர் 1-ந் தேதியிலிருந்து நவம்பர் 15-ந் தேதிவரை மொத்தம் ரூ. 16,03,027-6-9 உதவித் தொகை வழங்கப்பட்டதென்றும். மொத்தம் 1.41,24 259 கெஜம் துணி விற்பனையாயிற்று என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியைத் திணிக்க இயக்கம் நடத்த வேண்டுமாம்!

இந்தி வெறியருக்குத் தூபமிடுகிறார் மத்தியப் பிரதேச முதன் மந்திரி

வடவர் — தென்னாட்டவர் மீது இந்தியைத் திணிக்கவில்லையாம்!

தென்னாட்டவருக்கு ஆங்கில மோகம் அதிகமாம்!

தலைமை உயர் நீதிமன்றம், மாநில உயர் நீதிமன்றங்கள், இதர நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் அலுவல்கள் எல்லாம், உடனடியாக இந்தியில் நடைபெற வேண்டும் என்ற ஒரு யோசனையை, வெளியிட்டிருப்பதின் மூலம் வடநாட்டு இந்தி வெறியர் பட்டியலில தம் பெயரையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார், மத்திய பிரதேச முதன் மந்திரி ஆர். எஸ். சுக்லா.

'இதைச் செய்தாலன்றி, 15-ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்திற்கு பதில் இந்தியைப் புகுத்துவது என்ற திட்டம் நிறைவேறாது' என்றும் இவர் கூறினாராம்.

'உடனடியாக, இந்தியை சர்க்காரின் எல்லாத் துறை நிர்வாகத்திலும் இடம் பெறச் செய்ய இந்தி வெறியர்கள் ஒரு இயக்கம் நடத்த வேண்டும்' என்றும் அவர் தூபமிட்டாராம்!

தென்னாட்டின்மீது வடவர் இந்தியைத் திணிக்கிறார்கள் என்று கூறுவது தவறாம்—இந்த வடநாட்டுக்காரர் கூறுகிறார்!

இந்தி, இந்தியாவின் தேசிய மொழியாக ஏற்கப்பட்டிருக்கிறதாம், அதனால், அதனை ஒவ்வொரு இந்தியரும் கற்றுக்கொண்டாக வேண்டுமாம்.

ஆங்கிலத்தின்மீது தென்னாட்டவருக்கு நிரம்ப மோகமாம்! ஆனால் அது ஒரு அன்னிய மொழியாம்! எனவே, தொடர்ந்து இந்தியாவில் அது நீடிக்க முடியாதாம்!

இந்தியாவின் பல்வேறு பகுதி மக்களிடத்திலும் உள்ள தொடர்பை வலுப்படுத்தத் தேசிய மொழி பயன்படும் என்றும் இந்த முதன மந்திரி பிதற்றினாராம்!

233 தீவிரவாதிகள் படுகொலை

அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சி வலுக்கிறது

அல்ஜியர்ஸ் மே 7—

கடந்த 48 மணி நேரத்தில் பிரெஞ்சு இராணுவத்தினர் 233 அல்ஜீரிய தீவிரவாதிகளைக் கொன்று குவித்திருக்கின்றனர்; 105 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தீவிரவாதிகளை ஒழிக்க ஏகாதிபத்தியவாதிகள் இத்தனை கொடுமையான அடக்கு முறைகளை ஏவியும்கூட அல்ஜீரிய மக்கள், தீவிரவாதிகளாக மாறிக்கொண்டிருக்கின்றனரே தவிர, கோரிக்கையை விடுத்து, ஒதுங்கிவிடுபவர்களாகக் காணோம்.

கோயங்காவின் மதுரை 'தினமணி'யில் வேலை நிறுத்தம்

மதுரை 'தினமணி' பத்திரிகையில், 'மோனோடைப்' மிஷன் என்ற—தானாகவே அச்சுக் கோர்க்கும் இயந்திரம் இரண்டைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, எந்த விதக் காரணமும் முன்னெச்சரிக்கையுமின்றி சென்ற 30-4-56 முதல் அச்சுகோர்க்கும் 12 பேர்களை வேலையிலிருந்து விலக்கி விட்டார்கள்.

இதை எதிர்த்து மற்றுமுள்ள தொழிலாளர்கள் 35 பேர்கள்வரை வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

நர மாமிசம் தேடுவோரை அழிக்க!

மத்திய பாரத் சர்க்கார் பரிசு வழங்குகிறது!

நாகபுரி, மே 6—

மனிதர்களைப் புசிக்கும் கொடியோர்களை அழிப்போருக்கு ரூ 2000 வரை பரிசளிக்கப்படும் என்று மத்திய பிரதேச சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

சுமார் 20 மனிதரைப் புசிப்போர் இந்த மாநிலங்களில் அலைகின்றனராம்.

சிலர் கல்யாணத் தம்பதிகளைத் தாக்கி, தங்களின் இரத்த தாகத்தை தணித்துக் கொள்கின்றனராம்; இந்த மனித விரோதிகளை ஒழிக்க சர்க்கார் பல முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றனராம்.

சந்தா என்ற பகுதியில் உலவும் ஒரு மனிதரைப் புசிபவனை அழிப்போருக்கு ரூ. 500 பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.